இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் (இப்போது முதல் "**விதிமுறைகளும் நிபந்தனைகளும்**") என்பவை எச்.டி.எஃப்.சி வங்கி லிமிடெட் ("**எச்.டி.எஃப்.சி வங்கி**") வழங்கும் அலைவெண் அடையாளம்காணல்-செயல்படுத்தப்பட்ட டேகுகள் ("**ஃபாஸ்டேக்**") வழங்குவது மற்றும் விண்ணப்பித்தலுக்குப் பொருந்துகிறது. இந்த விதிமுறைகளும் நிபந்தனைகளும் எச்.டி.எஃப்.சி வங்கியால் அவ்வப்போது ஒப்புக்கொள்ள வேறு எந்த சொற்பதங்களுக்கும் கூடுதலானதாகத்தான் இருக்கும் என்பதுடன் அவற்றின் மதிப்பைக் குறைப்பதாக இருக்காது.

1. வரையறைகள்

இந்த விதிமுறைகளும் நிபந்தனைகளும் என்பதில், பொருள் அல்லது பின்னணி வகையில் ஏதேனும் முரண்பாடாக இருந்தால் தவிர பின்வருமாறு குறிப்பிட்டுள்ள அர்த்தத்தையே கொண்டிருக்கும்:

"**விண்ணப்பம்**" அல்லது "டேகு **விண்ணப்பம்**" என்பது எச்.டி.எஃப்.சி வங்கியில் டேகு பெறுவதற்கு டேகு விண்ணப்பதாரரால் கையொப்பமிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தைக் குறிக்கும், இதில் பின்னிணைப்புகள் மற்றும் அதற்குண்டான ஆணைகள் அடங்கும்;

"**சலுகையுள்ளவர்கள்**" என்பது தேசிய நெடுஞ்சாலைகளில் சுங்கக் கட்டணத்தை உருவாக்கி, பராமரித்து மற்றும் சேகரிப்பதற்கு இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் மற்றும் இந்த டேகுகள் வழியாக இத்தகைய சுங்கக் கட்டணம் செலுத்துதலைப் பெறுவதற்கு ஒப்புக்கொண்டவர்களால் சிறப்பு நோக்கமுள்ள வாகனங்களுக்கு வழங்கப்படும் சலுகை என்பதைக் குறிக்கிறது.

"**வாடிக்கையாளர் சேவை**" என்பது டேகு தொடர்புடைய எந்தவொரு கேள்விகளுக்கும், எச்.டி.எஃப்.சி வங்கியால் டேகு உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்ற, கட்டணமில்லா தொலைபேசி வழி வாடிக்கையாளர் சேவை மையம் என்பதைக் குறிக்கும்;

"**இ.டி.சி மையம்**" என்பது எச்.டி.எஃப்.சி வங்கியால் வழங்கப்பட்ட டேகுகள் வகையில் எந்தவொரு பங்கேற்பாளர் சுங்கச் சாவடியிலும், எந்தவொரு உறுப்பினராலும் சுங்கக் கட்டணத்தைச் செயல்படுத்திக்கொள்ளக்கூடிய, மின்னனு மையமாகும்.

"**எச்.டி.எஃப்.சி வங்கி இணையதளம்**" என்பது www.HDFCbank.com என்பதைக் குறிக்கிறது என்பதுடன் இது, எச்.டி.எஃப்.சி வங்கிக்குச் சொந்தமானதும், அவர்களால் இயக்கப்பட்டு பராமரிக்கப்படுவதும் ஆகும்; "**தேசிய நெடுஞ்சாலைகள்**" என்பவை இ.டி.சி மையம் மூலம் சுங்கக் கட்டணங்கள் செயல்படுத்தப்படக்கூடிய அனைத்து தேசிய நெடுஞ்சாலைகளையும் குறிக்கும்.

"டேகு" என்பது எச்.டி.எஃப்.சி வங்கியால் வழங்கப்பட்ட ஃபாஸ்ட்டேகை குறிக்கிறது, இது ஒரு பாதி-முடிவுற்ற பிரீபெய்டு பேமண்ட்டு ஆவணமாகச் செயல்படக்கூடியது, மீதமுள்ள தொகையானது டேகு உறுப்பினரால் அவ்வப்போது இத்தகைய ஆவணத்தில் லோடு/ ரீ-லோடு செய்யத்தக்க தொகையாக இருக்கும்;

"**டேகு மீதம்**" என்பது அவ்வப்போது டேகு உறுப்பினரால் இந்த டேகில்லோடு/ ரீ-லோடு செய்யத்தக்க மீதத்தொகையாக இருக்கும்;

"**டேகு உறுப்பினர்கள்**" என்பது நபர்களை, அதாவது, இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைப் பொறுத்து அத்தகைய நபர்கள் வைத்திருக்கும் வாகனங்கள் வகையில் எச்.டி.எ.ஃப்.சி வங்கியால் டேகுகள் வழங்கப்பட்ட நபர்களைக் குறிக்கிறது;
"**சுங்கச் சாவடிகள்**" என்பவை தேசிய நெடுஞ்சாலைகளைப் பயன்படுத்துவதற்காக சுங்கக் கட்டணங்களை செலுத்துவதற்கு தேசிய நெடுஞ்சாலைகளில் அமைந்திருக்கும் இத்தகைய சாவடிகளைக் குறிக்கும்;

"**பரிவர்த்தனை**" என்பது இந்த டேகை பயன்படுத்தி, இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைக் கருத்தில்கொண்டு மேற்கொள்ளப்படும் சுங்கக் கட்டணங்கள், பார்க்கிங் கட்டணங்களுக்குச் செலுத்தியவை, எரிபொருள் கட்டணங்கள் மற்றும் வேறு எந்தப் பரிவர்த்தனைகளையும் குறிக்கும்.

2. **விளக்கம்**

இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில், இந்தச் சூழலுக்குத் தேவையில்லாவிட்டால் தவிர:

(a) பன்மை உள்ளிட்ட ஒருமை மற்றும் அதற்கு நேர் எதிரில் மற்றும் எந்தவொரு பாலின வார்த்தைகளும் மற்ற பாலினங்களை உள்ளடக்கியதாகக் கருதப்படும்;
(b) இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைக் குறிக்கும் "இதனால்", "இவ்விடத்தில்" "இதன்மூலம்" "இங்கேயுள்ள" ஆகிய சொற்பதங்கள் மற்றும் வழிற்சொற்கள் அல்லது அதேபோன்ற வார்த்தைகள்;
(c) "உள்ளிட்டது" அல்லது "உள்ளடங்கியிருப்பது" என்ற வார்த்தைகளுக்கான குறிப்புகளை வரம்பின்றி கட்டமைக்கலாம்;
(d) எந்தவொரு பத்தி அல்லது அட்டவணைக்கான குறிப்பும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கான ஒரு பத்தியினுடைய அல்லது அட்டவணையினுடதைக் குறிக்கலாம்;
(e) எந்தவொரு சட்டமியற்றல், சட்டம், சுற்றறிக்கை அல்லது நெறிமுறை அல்லது அதுசார்ந்த எந்தவொரு ஷரத்தையும் குறிப்பதில் சட்டமியற்றல், சட்டம், சுற்றறிக்கை அல்லது நெறிமுறை ஆகியன இங்குள்ள தேதிக்குப் பின்னர் அவ்வப்போது, திருத்தப்பட்டபடி, சேர்க்கப்பட்ட அல்லது மறுபடி சேர்க்கப்பட்டபடி, சட்டப்பூர்வ ஷரத்திற்கான எந்தக் குறிப்பும் துணைநிலை சட்டவமைப்பை அந்த ஷரத்தின்படி அவ்வப்போது குறிப்பிடலாம்;
(f) "நபர்" என்பது தனிநபர், கூட்டாண்மை நிறுவனம், குறைந்த பொறுப்புள்ள கூட்டாண்மை, ஒரு நிறுவனம் (நிறுவனங்கள் சட்டம், 2013 இன் பிரிவு 2(20) இல் வரையறுத்துள்ளபடி), கார்ப்பரேட் அமைப்பு (நிறுவனங்கள் சட்டம், 2013 இன் பிரிவு 2(11) இல் வரையறுத்துள்ளபடி), கூட்டுறவு சங்கம், அறக்கட்டளை, பதிவுசெய்யப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒரு கூட்டுப்பங்கு நிறுவனம் மற்றும் வேறு எந்த நிறுவனமும் உள்ளிட்டவையாகும்;
(g) டேகு விண்ணப்பமானது இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகக் கருதப்படும்;
(h) தலைப்பு மற்றும் தடித்த தட்டச்சுகள் வசதிக்காக மட்டுமே பயன்படுத்துகின்றன என்பதுடன் இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை விளக்குவதை பாதிக்காது.

3. டேகு வழங்குதலும் செயல்படுத்தலும்

3.1 எச்.டி.எஃப்.சி வங்கி தனது முழு உளத்தேர்வின்படி, எந்தவொரு டேகு உறுப்பினருக்கும் எச்.டி.எஃப்.சி வங்கி தனது 'வாடிக்கையாளரை அறிதல்' தொடர்புடைய சரிபார்ப்புகளை மேற்கொள்வதற்கு, எந்தவித வரம்பிற்கும் உட்படாமல், கோருகின்ற எந்தவொரு ஆவணமும் உட்பட உரிய முறையில் பூர்த்திசெய்யப்பட்ட டேகு விண்ணப்பத்தைப் சமர்ப்பித்துள்ளதன் மூலம் அந்த டேகு உறுப்பினரால் வைக்கப்பட்ட விண்ணப்பத்தின் பேரில் டேகு வழங்கலாம்.

3.2 டேகு பெறுவதற்காக டேகு விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் நேரத்தில். ஒருமுறை மட்டும் செலுத்த வேண்டியுள்ள வழங்கல் கட்டணம் செலுத்துமாறு டேகு உறுப்பினரிடம் கேட்டுக்கொள்ளப்படும். கட்டணத் தொகையானது www.hdfcbank.com இல் குறிப்பிடப்படும்.

3.3 டேகு விண்ணப்பம் எதையும் ஏற்றுக்கொள்வது மற்றும் டேகு வழங்குதல் என்பது முற்றிலும் எச்.டி.எஃப்.சி வங்கி இன் தனியுரிமை என்பதையும், எந்தவொரு டேகு உறுப்பினருக்கும் டேகை வழங்குவதற்கும் எச்.டி.எஃப்.சி வங்கி கடமைப்பட்டுள்ளதாக புரிந்துகொள்ளத்தக்க வகையில் இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் எதுவும் அடங்கியிருக்கவில்லை என டேகு உறுப்பினர் ஒப்புகை அளிக்கிறார்.

3.4 டேகு உறுப்பினருக்கு எச்.டி.எஃப்.சி வங்கியால் வழங்கப்பட்ட டேகு, டேகு விண்ணப்பத்தில் டேகு உறுப்பினரால் குறிப்பிடப்பட்ட உரிமைத் தட்டி எண்ணைச் சுமந்திருக்கும் டேகு உறுப்பினருக்குச் சொந்தமான வாகனத்தில் எச்.டி.எஃப்.சி வங்கி முகவர்/டீலர் அல்லது டேகு உறுப்பினராலேயே கட்டாயமாக ஒட்டி வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

3.5 கீழேயுள்ள பத்தி 4.5 இன்படி எச்.டி.எஃப்.சி வங்கியால் டேகு செயல்படுத்தப்படும் வரை மற்றும் டேகு உறுப்பினருக்கு ஒவ்வொரு டேகிற்குமான வாலெட் உருவாக்கப்பட்டால் தவிர டேகை டேகு உறுப்பினரால் ரீலோடு செய்யவும் முடியாது, டேகில் லோடு செய்யப்பட்ட தொகைகளை டேகு உறுப்பினரால் உபயோகப்படுத்தவும் முடியாது.

4. டேகு செயல்படுத்துதல், லோடிங் மற்றும் ரீலோடிங்

4.1 டேகுகள் வழங்கப்பட்ட தேதியில் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பைக் கொண்டிருக்காது என்பதுடன் டேகு உறுப்பினருக்கு ஒவ்வொரு டேகுக்கும் வாலெட் உருவாக்கப்படும் நேரம் வரை முடக்கப்பட்ட நிலையிலேயே இருக்கும் என்பதை இதன்மூலம் டேகு உறுப்பினர் ஏற்றுக்கொண்டு ஒப்புகையளிக்கிறார்.

4.2 ஒரு பயனர் அடையாளச் சான்று/ஃபாஸ்டேக் வாடிக்கையாளர் அடையாளச் சான்று ஆகியவை எச்.டி.எஃப்.சி வங்கியால் உருவாக்கப்பட்டு, டேகு உறுப்பினர் எச்.டி.எஃப்.சி வங்கி இணையதளத்தில் லோடு/ரீலோடு செய்துகொள்ளச் செய்யும் வகையில் டேகு வழங்கப்படும் நேரத்தில் அனைத்து டேகு உறுப்பினர்களுக்கும் வழங்கப்படுகிறது. டேக் உறுப்பினர் இந்த அடையாளச் சான்றுகள் மற்றும் கடவுச்சொற்களை ரகசியாகவும் நன்கு பாதுகாக்கப்பட்டதாகவும் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதுடன், எந்தவொரு ஊழியர்கள் மற்றும் எச்.டி.எஃப்.சி வங்கி பிரதிநிதிகள் உள்ளிட்ட அனுமதியில்லாத நபரிடத்தில் இதை வெளிப்படுத்தாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும். டேகு உறுப்பினரால் பயனர் அடையாளச் சான்றுகள் மற்றும்/அல்லது கடவுச்சொற்கள் எந்தவொரு மூன்றாம் தரப்பினருக்கும் வெளிப்பட்டதன் காரணமாக டேகு உறுப்பினருக்கு எந்தவொரு இழப்பும் ஏற்பட்டால் அதற்கு எச்.டி.எஃப்.சி வங்கி எந்தவகையிலும் பொறுப்பேற்காது.

4.3 இந்த டேகுகளில் மதிப்பை லோடிங்/ ரீலோடிங் செய்யும் செயலாக்கம் பின்வருமாறு இருக்கும்:

(a) தங்களுடைய அடையாளச் சரிபார்ப்பு மற்றும் எச்.டி.எ.்.ப்.சி வங்கி பரிந்துரைத்துள்ள வேறு எந்தக் கட்டாயமான தேவைகளையும் பொறுத்து, அவ்வப்போது, எச்.டி.எ.்.ப்.சி வங்கி ("**கியோஸ்க்ஸ்**") அமைத்துள்ள எந்தவொரு வாடிக்கையாளர் டச் பாயிண்ட்டுகளிலும் டேகு உறுப்பினர் டேகை லோடு/ ரீலோடு செய்துகொள்ளலாம்; மற்றும்/அல்லது

(b) டேகு வழங்கும் சமயத்தில் எச்.டி.எ.்.ப்.சி வங்கியால் டேகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட பயனர் அடையாளச் சான்று மற்றும் கடவுச்சொல்லை பயன்படுத்தி அவர்கள் எச்.டி.எ.்.ப்.சி வங்கி இணையதளத்தில் உள்நுழைந்த பின்னர் கிடைக்கும் பேமெண்ட் கேட்வேயை பயன்படுத்தி செய்துகொள்ளலாம்.

(c) எச்.டி.எ.்.ப்.சி வங்கி இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ்.பாஸ்டேக் ரீசார்ஜ் செய்வதற்கான மற்ற டிஜிட்டல் பயன்முறைகளைப் பயன்படுத்தி செய்துகொள்ளலாம்.

4.4 இதில் மேலே குறிப்பிட்டுள்ளதற்கு மாறானது எதுவாக இருந்தாலும், மேலே பத்தி 4.3 இல் உள்ள விதிமுறைகளில் லோடிங்/ ரீலோடிங் வகையில் பின்வரும் விதிகள் பொருந்தும்:

(a) குறைந்தபட்ச கே.ஒய்.சி வாலெட்டிற்கு ரூ.10,000/- (பத்தாயிரம் ரூபாய் மட்டும்) மற்றும் முழு கே.ஒய்.சி வாலெட்டிற்கு ரூ.2,00,000/- (இரண்டு லட்சம் ரூபாய் மட்டும்) அல்லது எச்.டி.எ.்.ப்.சி வங்கி அவ்வப்போதும், ஆர்.பி.ஐ இன் அப்போதைய வழிகாட்டுதல்கள் மற்றும் சொல்பவற்றின்படியும் விதிக்கின்ற அளவுக்கான தொகைக்கு டேகு இருப்பு அளவுக்கு எந்தவொரு டேகுக்கும் லோடிங்/ ரீலோடிங் அனுமதிக்கப்படும்.

(b) முழு கே.ஒய்.சி வாலெட்டிற்கு ரூ.2,00,000/- மற்றும் குறைந்தபட்ச கே.ஒய்.சி வாலெட்டிற்கு ரூ.10,000/- என்ற ஒட்டுமொத்த வரம்பைப் பொறுத்து ஒரு மாதத்திற்கு ரூ.50,000/- (ஐம்பதாயிரம் ரூபாய் மட்டும்) மற்றும் ஒரு ரீலோடிற்கு ரூ.5,000/- (ஐந்தாயிரம் ரூபாய் மட்டும்) கேஷ் லோடிங் வரம்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. மின்னணு/ ஆன்லைன் வழியாக பி.பி.ஐகளின் லோடிங் வரம்பு வாலெட்டின் ஒட்டுமொத்த வரம்பைப் பொறுத்ததாகும்.

4.5 பின்வருவனவற்றைப் பொறுத்து டேகு செயல்படுத்தப்படும்: (i) எச்.டி.எ.்.ப்.சி வங்கியால் வழங்கப்பட்ட டேகு விண்ணப்பத்தின் அனுமதி; மற்றும் (ii) டேகு செயல்படுத்தப்படுகின்ற நேரத்தில் எச்.டி.எ.்.ப்.சி வங்கியால் குறிப்பிடப்பட்ட குறைந்தபட்ச தொகைக்கு டேகு உறுப்பினரால் தொடர்புடைய டேகு லோடிங் செய்யப்படுவது (டேகு லோடு செய்யப்பட வேண்டிய தேவையுள்ள தொகையானது ஒரு-முறை மட்டும் கட்டணத்தையும், மேல் குறிப்பிட்டுள்ள செக்யூரிட்டி டெபாசிட்டையும் உள்ளிடாததாக இருக்கும்).

5. டேகு உறுப்பினரால் டேகு பயன்படுத்தப்படுவது

5.1 சாடேகு உறுப்பினர் இவ்வாறு ஒப்புகை அளித்து ஏற்றுக்கொள்கிறார்:

(a) கீழே உள்ள பத்தி 5.3 இன் வகையில் எச்.டி.எ.்.ப்.சி வங்கி அல்லது நெறிமுறை அதிகாரிகளால் ்.பாஸ்டேக் செயல்படுத்தப்பட்டுள்ளதன் வழியாக பேமெண்ட் செய்யப்படுகின்ற சுங்கச் சாவடிகள், பார்க்கிங் பகுதிகள், எரிபொருள் நிலையங்கள் மற்றும் மற்ற போக்குவரத்து பயன்பாடுகளில் இந்திய ரூபாயில் பேமெண்ட்டுகள் செய்யப்பட வேண்டியுள்ள வகையில் மட்டுமே இந்தியாவில் மட்டுமே இந்த டேகு செல்லத்தக்கதாகும்.

(b) இந்த டேகு கண்டிப்பாக மாற்றத்தக்கதல்ல என்பதுடன் எச்.டி.எ.்.ப்.சி வங்கி முகவர்/டீலர் அல்லது டேகு உறுப்பினராலேயே ஒட்டி

வைக்கப்பட்டிருக்கின்ற, டேகு உறுப்பினருக்குச் சொந்தமான மேலே குறிப்பிட்டுள்ள வாகனம் வகையில் மட்டுமே பயன்படுத்தத்தக்கதாகும்.

(c) ஃபாஸ்டேக் வாலெட் ஆரம்பத்தில் இருந்த டேகு இருப்பின் அளவுக்கு மட்டுமே டேகு உறுப்பினரால் டேகை பயன்படுத்த முடியும்;

(d) இந்த டேகு எச்.டி.எஃப்.சி வங்கியின் சொத்து என்பதுடன் மாற்றித்தர-முடியாது; மற்றும்

(e) எந்த நேரத்திலும் டேகில் உள்ள/ லோடு செய்யப்பட்ட தொகைக்கு எச்.டி.எஃப்.சி வங்கியால் வட்டி எதுவும் செலுத்தப்பட மாட்டது.

5.2 டேகை பயன்படுத்துதல் இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளாலும், இந்த டேகு தொடர்புடைய வகையில், அவ்வப்போது, எச்.டி.எஃப்.சி வங்கி வழங்கியுள்ள அனைத்து கொள்கைகள், வழிகாட்டுதல்கள் மற்றும் அறிவுறுத்தல்களால்.

5.3 பங்கேற்கும் சுங்கச் சாவடிகளில் வழங்கப்பட்டுள்ள மின்னணு சுங்கக் கட்டண வசூல் சந்துகளில் தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள அத்தகைய சுங்கச் சாவடிகளில் சுங்கக் கட்டணங்களைச் செலுத்தும் நோக்கத்திற்காக டேகு உறுப்பினரால் டேகு பயன்படுத்தப்படலாம். பங்கேற்கும் சுங்கச் சாவடிகளின் பட்டியல் எச்.டி.எஃப்.சி வங்கி இணையதளத்தில் பதிவேற்றப்படும் என்பதுடன் அவற்றில் ஏதேனும் மாற்றங்கள் இருந்தால் அவை அவ்வப்போது புதுப்பிக்கப்படும்.

5.4 ஒரு டேகு உறுப்பினர் சுங்கச் சாவடிகள், பார்க்கிங் பகுதிகள், எரிபொருள் நிலையங்கள் மற்றும் எச்.டி.எஃப்.சி வங்கி அல்லது நெறிமுறை அதிகாரிகளால் செயல்படுத்தப்பட்டுள்ளபடி பிற போக்குவரத்து பயன்பாடுகளில் டேகை பயன்படுத்துகின்ற ஒவ்வொரு முறையும், அந்த டேகு உறுப்பினர் டேகு வகையில் கிடைக்கின்ற இருப்புத்தொகையைக் குறைத்துக்கொள்வதற்கான அனுமதியை எச்.டி.எஃப்.சி வங்கிக்கு அளிக்கிறார். இதன்மூலம், ஒருவேளை சுங்கக் கட்டணத் தொகைகளின், *குறிப்பாக,* ஏதேனும் தவறான கணக்கிடுதல் என்றால் அல்லது டேகு அமைக்கப்பட்டுள்ள வாகனத்தின் வகை வகையில் ஏற்பட்டிருக்கும் ஏதேனும் பொருத்தமின்மை என்றால் தொடர்புடைய டேகு இருப்பில் டெபிட் சரிசெய்தல்களை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக டேகு உறுப்பினர் எச்.டி.எஃப்.சி வங்கிக்கு தனது ஒப்புதலை அளிக்கிறார்.

5.5 ஒரு தனி பரிவர்த்தனையிலோ அல்லது தொடர் பரிவர்த்தனைகள் வழியாகவோ இருக்கின்ற டேகு இருப்பைத் தாண்டிச்செல்ல டேகு உறுப்பினருக்கு அனுமதி இல்லை. டேகு இருப்பைக் காட்டிலும் அதிகமாக சுங்கக் கட்டணத் தொகை செலுத்தப்பட இருக்கும் நிலையில் எந்தவொரு பங்கேற்கும் சுங்குச் சாவடியிலும் எந்தவொரு மின்னணு சுங்க வசூல் சந்தின் வழியாகவும் ஓட்டிச்செல்ல முயற்சித்தால் அவ்வாறு செய்ய முடியாமல் போகும் என்பதற்கு டேகு உறுப்பினர் ஒப்புகையளித்து ஏற்றுக்கொள்கிறார்.

5.6 எந்தச் சூழ்நிலையிலும், டேகு இருப்பைக் காட்டிலும் பரிவர்த்தனை தொகை அதிகமாக இருந்தால் அது எதிர்மறை டேகு இருப்பிற்குக் காரணமாகும் என்பதுடன் அத்தகைய எதிர்மறை டேகு இருப்பின் தொகைக்கு டேகு உறுப்பினரே எச்.டி.எஃப்.சி வங்கிக்குப் பொறுப்பானவர் மற்றும் தேவையின்படி எச்.டி.எஃப்.சி வங்கிக்கு அந்தத் தொகையை செலுத்தவும் வேண்டியிருக்கும்.

5.7 எந்தக் காரணமும் சொல்லவேண்டிய அவசியம் இல்லாமல், டேகு மீதான எந்தவொரு பரிவர்த்தனை கோரிக்கையையும் மறுப்பதற்கான முழு தன்னுரிமை

எச்.டி.எஃப்.சி வங்கிக்கு அதனளவில் உள்ளது.

5.8 பங்கேற்கும் சுங்கச் சாவடிகள், பார்க்கிங் பகுதிகள், எரிபொருள் நிலையங்கள் மற்றும் எச்.டி.எஃப்.சி வங்கி அல்லது நெறிமுறை அதிகாரிகளால் செயல்படுத்தப்பட்டுள்ளபடி பிற போக்குவரத்து பயன்பாடுகளில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு பரிவர்த்தனையும் அந்தப் பரிவர்த்தனைக்கு பதிவுசெய்யப்பட்ட கட்டணம் உண்மையில் டேகை பயன்படுத்தும் டேகு உறுப்பினரால் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டது என்பதற்கான இறுதி ஆதாரமாக இருக்கும், இதில் டேகு காணாமல் போயிருப்பது, திருடப்பட்டிருப்பது அல்லது மோசடியாகப் பயன்படுத்தப்பட்டிருப்பது ஆகிய சூழ்நிலைகள் விதிவிலக்காகும், இத்தகைய சூழ்நிலையில், அந்த பரிவர்த்தனை டேகு உறுப்பினரால் பாதிக்கப்பட்டதல்ல என்பதை நிரூபிக்கும் பொறுப்பு அந்த டேகு உறுப்பினரையே சேரும்.

5.9 டேகானது கறுப்புப் பட்டியல்/ குறைவான இருப்புப் பட்டியல் அல்லது அத்தகைய பிற பட்டியலில், அவ்வப்போது நெறிமுறை அதிகாரிகளால் அறிவுறுத்தப்படுவதன்படி அந்த டேகு சேர்க்கப்படலாம் என்பதற்கும் பின்வரும் சூழ்நிலைகளில் எச்.டி.எஃப்.சி வங்கியால் தக்கவைக்கப்படும் என்பதையும் டேகு உறுப்பினர் ஏற்றுக்கொள்கிறார்:

(a) காரணம் எதுவாக இருப்பினும் சம்பந்தப்பட்ட டேகை கறுப்புப் பட்டியலில் சேர்க்க எந்தவொரு அரசாங்க அதிகாரியும் (வரன்முறை இல்லாமல் இந்திய தேசிய பேமெண்ட் கார்ப்பரேஷன் உட்பட) எச்.டி.எஃப்.சி வங்கியிடம் கேட்டுக்கொண்டால் அல்லது அவ்வாறு செய்வதற்கு ஏதேனும் காரணம் இருப்பதாக எச்.டி.எஃப்.சி வங்கி கருதினால், எ.கா. ஏதேனும் வழக்கத்திற்கு மாறானவை கண்டுபிடிக்கப்படுதல் அல்லது டேகு அல்லது அதன் பயன்பாடு வகையில் சந்தேகப்பட்டால்; மற்றும்

(b) எச்.டி.எஃப்.சி வங்கியால் அவ்வப்போது வரையறுக்கப்படுகின்ற ஆரம்ப வரம்பிற்கும் கீழே டேகு இருப்பு சென்றுவிட்டால், சம்பந்தப்பட்ட டேகானது குறைவான-இருப்புப் பட்டியலில் (குறைந்தபட்சம் மேற்படி குறைந்தபட்ச ஆரம்ப வரம்பு வரை டேகு இருப்பை டேகு உறுப்பினர் ரீலோடு செய்யும்வரை) சேர்க்கப்படலாம் என்பதுடன் இதுகுறித்து டேகு உறுப்பினருக்கு ஒரு அறிவிப்பு அனுப்பி வைக்கப்படலாம்.

5.10 மேலேயுள்ள பத்தி 5.9 வகையில் டேகு உறுப்பினரின் டேகு கறுப்புப் பட்டியல்/குறைவான இருப்புப் பட்டியலில் சேர்க்கப்படுகின்ற சூழ்நிலையில், சுங்கக் கட்டண பேமெண்ட்டிற்கு அந்த டேகு பயன்படுத்தத்தக்கதல்ல என்பதுடன் அதன்படி அந்த டேகை வைத்திருக்கும் டேகு உறுப்பினரின் வாகனமானது எந்தவொரு பங்கேற்கும் சுங்கச் சாவடியிலும் உள்ள எந்தவொரு மின்னணு சுங்கக் கட்டண வசூலிப்புச் சந்திலும் ஓட்டிச்செல்லப்பட அனுமதிக்கப்படாது. சிஸ்டம் செயலிழப்பு அல்லது மற்றவகையில் டேகு உறுப்பினரின் வாகனமானது, அந்த டேகு கறுப்புப் பட்டியல்/குறைந்த இருப்பு பட்டியலில் இருந்துகொண்டிருந்தாலும்கூட, எந்தவொரு பங்கேற்பு சுங்கச் சாவடியிலும் உள்ள சுங்கக் கட்டண வசூலிப்பு சந்தின் வழியாகப் போக முடியாமல் இருந்தால், எச்.டி.எஃப்.சி வங்கியால் பொருத்தமானது என கருதப்படும் பட்சத்தில் டேகு உறுப்பினரிடம் அந்த அபராதம்/ பெனால்டியை செலுத்துமாறு கேட்க அதற்கு உரிமையுள்ளது. தன்னுடைய டேகு கறுப்புப் பட்டியல்/குறைந்த இருப்பு பட்டியலில் சேர்க்கப்படிந்தாலும், அந்த டேகு வகையில் செய்யப்பட்ட எந்தவொரு பரிவர்த்தனைக்கும் எச்.டி.எஃப்.சி வங்கி பொறுப்பல்ல என்பதை டேகு உறுப்பினர் ஏற்றுக்கொள்கிறார்.

6. தொலைந்துபோன அல்லது திருடப்பட்ட டேகுகள்

6.1 டேகு தொலைந்துபோய்விட்டது அல்லது திருடப்பட்டது என்றால், அந்த இழப்பு/திருட்டை தொலைபேசி மூலம் www.hdfcbank.com/fastag.com இணையதளத்தில் குறிப்பிட்டுள்ள வாடிக்கையாளர் சேவையில் உடனடியாகத் தெரிவித்தாக வேண்டும் அல்லது விசாரிக்கத் தொடங்கியிருக்க வேண்டும். அந்தத் தகவல் கிடைத்ததை அடுத்து, வேலைநாளில் வேலை நேரத்தின்போது, டேகு உறுப்பினரின் போதுமான சரிபார்ப்பை அடுத்து, அந்த டேகை ஹாட்லிஸ்ட்/ரத்துசெய்தல்/நீக்குதல்/தடுத்தல் மற்றும் அவை தொடர்புடைய அனைத்து வசதிகளையும் நீக்குதல் ஆகியவற்றுடன் வங்கியானது இது சம்பந்தமாக டேகு உறுப்பினருக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய எந்தவொரு அசௌகரியத்திற்கும் பொறுப்பேற்காது. டேகு சம்பந்தமாக, அந்த டேகு தொலைந்துபோனது/ திருடப்பட்டது என புகார் அளிக்கப்படுவம் வரை ஏற்பட்டிருக்கும் அனைத்து கட்டணங்களுக்கு டேகு உறுப்பினரே பொறுப்பாவார். மேலும், மேலே குறிப்பிட்டுள்ள படிநிலைகள் இணக்கமாக இல்லை என எச்.டி.எ.ஃப்.சி வங்கி தீர்மானிக்கும் சூழ்நிலையில், தொலைந்துபோன அல்லது திருடுபோன டேகு உறுப்பினருக்கே முழு பொறுப்பும் சேரும். டேகில் பரிவர்த்தனைகள் செய்யப்பட்டுள்ள நேரத்தைத் தெரிவிப்பதில் ஏதேனும் சச்ரவு ஏற்பட்டால் அல்லது தொலைந்துபோன/ திருடப்பட்ட டேகு தொடர்புடைய வகையில் வேறு ஏதேனும் விஷயம் என்றால், எச்.டி.எ.ஃப்.சி வங்கி தீர்மானிப்பதே இறுதியாகும்.

6.2 டேகு தொலைந்துவிட்டதாக/ திருடப்பட்டதாக மற்றும் அதைத்தொடர்ந்து கண்டுபிடிக்கப்பட்டதாகப் புகாரளிக்கப்பட்டால், அந்த டேகை எச்.டி.எ.ஃப்.சி வங்கியிடம் ஒப்படைக்க வேண்டியது டேகு உறுப்பினரின் பொறுப்பாகும் என இதன்மூலம் டேகு உறுப்பினர் உறுதிமொழி அளிக்கிறார். அதேபோல், டேகு சேதமடைந்துவிட்டால், எச்.டி.எ.ஃப்.சி வங்கியின் முழு தனியுரிமையின்படி, ஒரு புதிய டைகே வழங்கச் செய்வதற்கு சேதமடைந்த டேகை எச்.டி.எ.ஃப்.சி வங்கியிடம் திருப்பியளிக்க வேண்டியது டேகு உறுப்பினரின் பொறுப்பாகும்.

7. டேகுகளை ஒப்படைத்தல்/மாற்றித்தருதல்

7.1 டேகின் செல்லுபடி காலகட்டத்தின் காலாவதி தேதிக்கு முன்பாக உட்பட எந்த நேரத்தில் வேண்டுமானாலும் எந்தவொரு டேகையும் ஒப்படைக் கோருவதற்கு எச்.டி.எ.ஃப்.சி வங்கிக்கு உரிமையுள்ளது என்பதை டேகு உறுப்பினர் ஏற்றுக்கொண்டு ஒப்புகை அளிக்கிறார். டேகு உறுப்பினரானவர், அத்தகைய தேவை ஏற்பட்டுள்ளதை அடுத்து டேகு உறுப்பினர் உடனடியாக இது குறித்து எச்.டி.எ.ஃப்.சி வங்கியால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப சம்பந்தப்பட்ட டேகை ஒப்படைக்க வேண்டும். டேகு உறுப்பினருக்கு இ.டி.சி வசதி தேவைப்படாத சூழ்நிலையில் அல்லது இ.டி.சி வசதி வழங்குதல் எச்.டி.எ.ஃப்.சி வங்கியால் எந்தக் காரணத்திற்காகவும் அதனுடைய முழு தனியுரிமையின்படி திரும்பப் பெறப்பட்டால் டேகு ரத்துசெய்தலுக்காக அதனை எச்.டி.எ.ஃப்.சி வங்கியிடம் திரும்ப ஒப்படைக்க வேண்டியது டேகு உறுப்பினரின் பொறுப்பாகும்.

7.2 டேகு உறுப்பினர் இறந்துவிட்டால், அந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து எச்.டி.எ.ஃப்.சி வங்கி அந்த டேகை ரத்துசெய்யலாம்.

8. செல்லுபடியாவதும் காலாவதியும்

8.1 கீழேயுள்ள பிழை! குறிப்புரையின் மூலம் கண்டறியப்படவில்லை என்ற பத்திக்கு உட்பட்டு, டேகு வழங்கப்பட்ட தேதியில் இருந்து 5 (வருடங்கள்) வரை ஒரு டேகு செல்லத்தக்கதாக இருக்கும்.

8.2 பிரீபெய்டு ஆவணங்கள் குறித்த ஆர்.பி.ஐ வழிகாட்டுதல்களின்படி, ஃபாஸ்டேக் வாலெட்டின் கே.ஒய்.சி நிலையானது வழங்கப்பட்ட தேதியில் இருந்து 24 மாதங்களுக்குள் முழு கே.ஒய்.சிக்குப் புதுப்பிக்கப்படவில்லை என்றால், குறைந்தபட்ச கே.ஒய்.சி வாலெட்டானது கிரெடிட் நிறுத்தப்பட்டது என குறிக்கப்பட்டு முடிக்கப்படும். இந்த ஆவணத்துடன் முரண்பாடாக இருப்பது எதுவாகினும், எச்.டி.எஃப்.சி வங்கி எந்த நேரத்தில் வேண்டுமானாலும் டேகு உறுப்பினருக்குத் தெரிவித்தும் தெரிவிக்காமலும், தன்னுடைய முழு தனியுரிமையின்படி எந்வொரு டேகையும் ரத்துசெய்யலாம்/ முடக்கலாம்.

8.3 எந்தவொரு டேகும் நீக்கப்படும் நிலையில், டேகு வகையிலான எதிர்மறை இருப்பு (எதுவாகினும்) மற்றும் டேகு வகையில் நிலுவையில் உள்ள வேறு எந்தத் தொகைகளும் உடனடியாக நிலுவையில் உள்ளதும் டேகும் உறுப்பினரால் செலுத்தப்பட வேண்டியதும் ஆகும் என்பதுடன் அதற்காக ஏற்பட்டுள்ள வட்டியானது எச்.டி.எஃப்.சி வங்கியால் அவ்வப்போது, முடக்கப்பட்ட தேதியில் இருந்து அந்தப் பணம் பேமெண்ட் செய்யப்படும் தேதி வரையுள்ள விகிதமாக இருக்கும்.

8.4 ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளதை அடுத்து எச்.டி.எஃப்.சி வங்கி அல்லது அதன் பிரதிநிதிகளிடம் டேகை ஒப்படைக்கவும், அந்த டேகு நீக்கப்பட்ட பின்னர் பயன்படுத்த அல்லது பயன்படுத்த முயற்சிப்பதில்லை எனவும் டேகு உறுப்பினர் ஏற்றுக்கொள்கிறார்.

8.5 டேகு உறுப்பினர் எந்த நேரத்தில் வேண்டுமானாலும், எந்தவொரு எச்.டி.எஃப்.சி வங்கி கிளை அல்லது எந்தவொரு கியோஸ்கிற்கும் சென்று முடக்குதல் சம்பந்தமாக எச்.டி.எஃப்.சி வங்கியின் கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களுக்குத் தேவையான ஆவணங்களை சமர்ப்பிப்பதன் மூலம் டேகு உறுப்பினர் முடக்குதலுக்குக் கோரிக்கை வைக்கலாம். எச்.டி.எஃப்.சி வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட பணியாளரிடம் இருந்துவரும் டேகை திருப்பி அளிக்குமாறும் டேகு உறுப்பினரிடம் கேட்டுக்கொள்ளப்படலாம். அதன்பின்னர், டேகு இருப்பானது (எதுவாகினும்) அதே தொகையை அதனுடைய வங்கிக் கணக்கில் (இது தொடர்பான விவரங்கள் டேகு விண்ணப்பத்தில் டேகு உறுப்பினரால் வழங்கப்பட்டிருக்கும்), டேகு உறுப்பினரால் வைக்கப்பட்ட முடக்குதலுக்கான கோரிக்கை விடுக்கப்பட்ட தேதியில் இருந்து 15 (பதினைந்து) நாட்களுக்குள் வைக்கப்படும்.

8(a) **ரீஃபண்டு மற்றும் முடித்துவைத்தல்**

டேகு உறுப்பினருக்கு எச்.டி.எஃப்.சி வங்கிக் கணக்கு இருந்தால், அந்தக் கணக்கிலேயே டேகு முடித்துவைத்தல் கோரிக்கை மேற்கொள்ளப்பட்டு செயலாக்கப்படும். எச்.டி.எஃப்.சி வங்கியில் தேவையான கணக்கு டேகு உறுப்பினருக்கு இல்லாத சூழ்நிலையில், தொகையானது வரைவுக் காசோலை (டி.டி) வழியாகச் செயலாக்கப்படும் என்பதுடன் எச்.டி.எஃப்.சி வங்கியிடம் உள்ள பதிவுசெய்யப்பட்ட முகவரிக்கு அனுப்பப்படும் அல்லது மூடுதல் கோரிக்கை வைக்கப்படும்போது வழங்கப்பட்ட கணக்கு விவரங்களில் என்.இ.எஃப்.டி மாற்றல்

செய்யப்படும்.

9. அறிக்கைகள் மற்றும் பதிவுகள்

9.1 டேகுகள்/ பரிவர்த்தனைகள் வகையில் (வரம்பிற்குட்படுத்தாமல், இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி செய்யப்பட்டுள்ள அல்லது பெறப்பட்டுள்ள பேமெண்ட்டுகள்), டேகு உறுப்பினருக்கு எதிர்நிலையில், மின்னணு அல்லது ஆவண வடிவில் எச்.டி.எ.்.ப்.சி வங்கியால் பராமரிக்கப்படும் அனைத்துப் பதிவுகளும், முடிவான ஆதாரமாகக் கருதப்படும்.

9.2 எந்தப் பரிவர்த்தனை வகையிலும் எந்தவொரு டேகு உறுப்பினருக்கும் பரிவர்த்தனை ரசீதுகளின் நகல்களை வழங்க வேண்டிய பொறுப்பு எச்.டி.எ.்.ப்.சி வங்கிக்கு இல்லை என்பதுடன் எச்.டி.எ.்.ப்.சி வங்கியில் டேகு உறுப்பினர் பதிவு செய்துள்ள மொபைல் எண்ணில் குறுஞ்செய்தி அனுப்புதல் வழியாக செய்யப்படும் பரிவர்த்தனை விழிப்பூட்டல்களை மட்டுமே டேகு உறுப்பினர் பெறுவார்.

10. ஈடுசெய்தல்

10.1 டேகு உறுப்பினருக்கு எச்.டி.எ.்.ப்.சி வங்கி டேகு வழங்குவதற்குப் பிரதிபலனாக, (a) டேகு உறுப்பினருக்கு எச்.டி.எ.்.ப்.சி வங்கியால் இ.டி.சி வசதி வழங்கப்படுவது; (b) டேகு உறுப்பினரின் அலட்சியம், தவறு அல்லது தவறான நடத்தை; (c) இ.டி.சி வசதி தொடர்புடைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது எந்தவொரு பொருந்தக்கூடிய சட்டத்தாலும் மீறல் அல்லது இணக்கமின்மை; (d) டேகு, இ.டி.சி வசதி மற்றும்/அல்லது எந்தவொரு பரிவர்த்தனையும் வழங்குதல்/பயன்படுத்துதல் தொடர்புடைய அல்லது சம்பந்தமாக எச்.டி.எ.்.ப்.சி வங்கிக்கு எதிராக எந்த மூன்றாம் தரப்பாலும் கிளைம் செய்யப்படுதல் அல்லது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை; (e) டேகு உறுப்பினரால் எந்தவொரு பரிவர்த்தனையுடனும் தொடர்புடைய மோசடி அல்லது நேர்மையின்மை ஆகியவற்றின் காரணமாக ஏற்பட்டுள்ள, தொடர்விளைவாக அல்லது காரணமாக எச்.டி.எ.்.ப்.சி வங்கி மற்றும் அதன் அதிகாரிகள், இயக்குநர்கள், ஊழியர்கள், பங்குதாரர்கள், முகவர்கள், ஆலோசகர்கள் மற்றும் பிற பிரதிநிதிகளுக்கு எந்த நேரத்திலும், ஏற்பட்டுள்ள, நீடிக்கின்ற, பாதிப்பு அல்லது உள்ளாக்குதல், உள்ளாகியிருத்தல் அல்லது பாதிக்கப்பட்டிருத்தல் என எத்தகைய தன்மை கொண்டதற்கும் ஏற்பட்ட கட்டணங்கள் மற்றும் செலவுகள், அனைத்து நடவடிக்கைகள், கிளைம்கள், வழக்குகள், தேவைகள், விசாரணைகள், இழப்புகள், சேதாரங்கள், தனிப்பட்ட காயம், செலவுகள் ஆகிய அனைத்திற்கும் எதிராக இழப்பீடு வழங்கவும், எச்.டி.எ.்.ப்.சி வங்கி மற்றும் அதன் அதிகாரிகள், இயக்குநர்கள், ஊழியர்கள், பங்குதாரர்கள், முகவர்கள், ஆலோசகர்கள் மற்றும் பிற பிரதிநிதிகள் இழப்பீடு பெறக்கூடியவர்களாக இருப்பார்கள் என்றும் டேகு உறுப்பினரானவர் இதன்மூலம் ஏற்றுக்கொள்கிறார்.

11. பொறுப்பிலிருந்து நீக்கம்

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் வேறு எந்த ஷரத்துகளும் பாதிக்கப்படாமல், இ.டி.சி வசதி மற்றும்/அல்லது இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்புடைய வகையில் நேரடியாகவோ மறைமுகமாகவோ

எந்தவொரு இழப்பு அல்லது சேத்த்திற்கும் அல்லது எதன் காரணமாக எப்படிப்பட்டதாக ஏற்பட்டிருந்தாலும் டேகு உறுப்பினருக்கு எச்.டி.எ.ஃப்.சி வங்கி பொறுப்பேற்காது, இழப்பு அல்லது சேதாரம் என்பதில் இவற்றினால் ஏற்படுபவையும் அடங்கும்: (a) பங்கேற்கும் சுங்கச் சாவடி தொடர்புடைய வகையில் ஏதேனும் பழுது அல்லது பிரச்சனைகள்; (b) டேகை மதிப்பதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு எந்தவொரு நபரும் மறுப்பது;(c) கணினி அமைப்புகள் எதனுடைய செயலிழப்பு;(d) எச்.டி.எ.ஃப்.சி வங்கியின் வளாகங்கள் அல்லது எந்தவொரு கியோஸ்கிலும் நியமிக்கப்பட்ட எச்.டி.எ.ஃப்.சி வங்கி ஊழியர்கள் தவிர வேறு யாரிடமும் டேகு உறுப்பினர் டேகு ஒப்படைக்கப்படுவது;(e) பங்கேற்கும் சுங்கச் சாவடிகளின் செயல்படுத்துநர்களால் பராமரிக்கப்படும் சர்வர்களில் உள்ள தரவு தொலைந்துபோவது; மற்றும்/அல்லது (f) டேகு உறுப்பினர் டேகுகளை அணுகுவது மற்றும்/அல்லது பயன்படுத்துவதில் ஏதேனும் குறுக்கீடுகள் அல்லது நிறுத்தப்படுதல்.

12. கட்டணங்கள்

12.1 பொருத்தமானது என தோன்றினால், அவ்வப்போது டேகுகள் வழங்குதல் மற்றும் பயன்படுத்துதலுக்குப் பொருந்துகின்ற கட்டணங்கள் வகையில், எச்.டி.எ.ஃப்.சி வங்கி தள்ளுபடிகளையும் ஆஃபர்களையும் வழங்கலாம், இது அவ்வப்போது எச்.டி.எ.ஃப்.சி வங்கி வரையறுக்கின்ற விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்தாக இருக்கலாம்.

12.2 டேகு பயன்படுத்துவதன் விளைவாக ஏற்படும் எந்தவொரு அரசாங்கக் கட்டணங்கள், தீர்வை, டெபிட் அல்லது செலுத்தவேண்டிய வரி யாவுமே முற்றிலும் டேகு உறுப்பினரால் செலுத்தப்பட வேண்டியவை என்பதுடன் அவையே எச்.டி.எ.ஃப்.சி வங்கி மீது விதிக்கப்பட்டால் (நேரடியாகவோ மறைமுகமாகவோ), வங்கியானது அத்தகைய கட்டணங்கள், தீர்வை, டெபிட் அல்லது செலுத்தவேண்டிய வரியை இருக்கின்ற டேகு இருப்பிலிருந்து டெபிட் செய்துகொள்ள எச்.டி.எ.ஃப்.சி வங்கிக்கு உரிமையுள்ளது என்பதை டேகு உறுப்பினர் ஏற்றுக்கொண்டு ஒப்புகை அளிக்கிறார்.

12.3 டேகு பயன்படுத்துவதற்காகப் பொருத்தமான மற்றும் பிற கட்டணங்களை விதிப்பதற்கு எச்.டி.எ.ஃப்.சி வங்கிக்கு உரிமையுள்ளது, இந்தக் கட்டணங்கள் அவ்வப்போது எச்.டி.எ.ஃப்.சி வங்கியால் டேகு உறுப்பினருக்குத் தெரிவிக்கப்படும். இருக்கின்ற டேகு இருப்பில் டெபிட் செய்துகொள்வதன் மூலம் இந்தக் கட்டணங்கள் அனைத்தையும் மீட்டுக்கொள்ள எச்.டி.எ.ஃப்.சி வங்கிக்கு இதன்மூலம் டேகு உறுப்பினர் அனுமதி அளிக்கிறார். மேலே குறிப்பிட்டுள்ள ஃபீஸ் மற்றும்/அல்லது கட்டணங்கள் எதையும் கழித்துக்கொள்ள இருக்கின்ற டேகு இருப்பு போதுமானதாக இல்லாத சூழ்நிலையில், சம்பந்தப்பட்ட டேகு உறுப்பினரிடமிருந்து அவற்றை மீட்டுக்கொள்ளவும், சம்பந்தப்பட்ட டேகில் மேற்கொண்டு எந்தவொரு பரிவர்த்தனையையும் மறுப்பதற்கும் எச்.டி.எ.ஃப்.சி வங்கிக்கு உரிமை உள்ளது.

13. தகராறுகள்

13.1 பரிவர்த்தனையில் ஏதேனும் வழக்கத்திற்கு மாறானவைகள் அல்லது முரண்பாடுகள் இருந்தால் அல்லது டேகு உறுப்பினருக்குப் பரிவர்த்தனை குறித்து ஏதேனும் கேள்வி அல்லது புகார் இருந்தால் அந்தப் பரிவர்த்தனை நடந்த 15 (பதினைந்து) நாட்களுக்குள் டேகு உறுப்பினர் www.hdfcbank.com/fastag.com இல் குறிப்பிட்டுள்ளபடி வாடிக்கையாளர் சேவை எண்ணை தொடர்புகொள்வதன்

மூலம் எச்.டி.எ.ஃப்.சி வங்கியிடம் தகவல் தெரிவிக்கலாம். எந்தவொரு பரிவர்த்தனையும் ஏற்பட்டுள்ளதற்குப் 15 (பதினைந்து) நாட்களுக்குள் எச்.டி.எ.ஃப்.சி வங்கி எத்தகைய தகவல்களையும் பெற்றிருக்கவில்லை என்றால், சம்பந்தப்பட்ட பரிவர்த்தனை(கள்) எந்தவித முரண்பாடும் இன்றி நடந்துள்ளதாகக் கருதிக்கொள்ள அதற்கு உரிமையுள்ளது.

13.2 விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் வகையில் டேகு உறுப்பினரால் செய்யப்பட்ட எந்தவொரு புகார்கள்/கேள்வியையும் விசாரிக்கவும் அதற்கு பதிலுரைக்கவும் எச்.டி.எ.ஃப்.சி வங்கியை செயல்படுத்தும் வகையில், அவை தொடர்பாக எச்.டி.எ.ஃப்.சி வங்கியால் கேட்கப்படக்கூடிய அனைத்து தகவல்கள் மற்றும் ஆவணங்களையும் எச்.டி.எ.ஃப்.சி வங்கிக்கு டேகு உறுப்பினர் வழங்க வேண்டியிருக்கும்.

13.3 டேகு உறுப்பினரால் வாடிக்கையாளர் சேவை மையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ள புகார்/ கேள்வி பெற்றுக்கொள்ளப்பட்ட 15 (பதினைந்து) நாட்களுக்குள் எந்தவொரு பரிவர்த்தனைக்கும் தொடர்புடைய டேகு உறுப்பினரின் வருத்தப்படத்தக்க புகார்கள்/ கேள்விகளையும் தீர்ப்பதற்கு எச்.டி.எ.ஃப்.சி வங்கி நம்பகத்தன்மை மிக்க மற்றும் நியாயமான முயற்சிகளை மேற்கொள்ளும். அத்தகைய முயற்சிக்குப் பின்னரும் கேள்விக்குரிய பரிவர்த்தனை சரியானதும் செல்லத்தக்கதுமாகும் என எச்.டி.எ.ஃப்.சி வங்கி தீர்மானித்தால் டேகு உறுப்பினரிடம், விற்பனை ரசீது அல்லது பேமெண்ட் தேவைக்கோரிக்கையின் நகல் உட்பட, அது தொடர்பான நியாயப்படுத்தலுடன் எழுத்துப்பூர்வமாகத் தெரிவிக்கும்.

13.4 எச்.டி.எ.ஃப்.சி வங்கி தன்னுடைய வாடிக்கையாளர்களிடம் எந்தவொரு ரகசியத் தகவல்களையும் கேட்காது என்பதை கருத்தில்கொள்ளவும், ஆதலால் டேகு உறுப்பினர்கள் கடவுச்சொற்கள், பயனர் அடையாளச் சான்றுகள் உள்ளிட்டவை மட்டுமல்லாமல் ரகசியத்தன்மை கொண்ட எந்தவொரு தகவல்களையும், யார் கேட்டாலும் எந்த நபரிடமும் பகிர்ந்துகொள்ளக் கூடாது.

13.5 டேகு உறுப்பினரால் எழுப்பப்பட்ட தகராறுகளை தீர்ப்பது தொடர்பாக, மற்றவற்றுடன் சேர்த்து ஆதாரமாகச் செயல்படும் நோக்கத்துடன் பங்கேற்பாளர் சுங்கச் சாவடிகளில் படம் பிடிக்கும் கேமராக்கள் நிறுவப்பட்டுள்ளதை டேகு உறுப்பினர் ஏற்றுக்கொண்டு ஒப்புகை அளிக்கிறார்.

13.6 எங்களுடைய புகார்கள் நடைமுறை தொடர்பான முழு விவரங்களுக்கு, எச்.டி.எ.ஃப்.சி வங்கியின் இணையதளத்தைப் பார்க்கவும். வாடிக்கையாளர் சேவை எண்கள் எச்.டி.எ.ஃப்.சி வங்கி இணையதளத்தில் அவ்வப்போது புதுப்பிக்கப்படுகின்றன என்பதை கருத்தில்கொள்ளவும்.

14. வெளிப்படுத்தல்கள்

14.1 எச்.டி.எ.ஃப்.சி வங்கி தன்னுடைய கிளைகள், துணை நிறுவனங்கள், கூட்டாளர்கள், பிரதிநிதிகள், தணிக்கையாளர்கள், துணை-ஒப்பந்ததாரர்கள், சேவை வழங்குநர்கள், பிற வங்கிகள்/நிதி நிறுவனம், கடன் மையங்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகளிடமும் அவர்களுக்கு இடையிலும், எச்.டி.எ.ஃப்.சி வங்கியால் அவசியமானது என கருதத்தக்க வகையில் பேமெண்ட் வரலாறு உள்ளிட்ட டேகு உறுப்பினர்களுடன் தொடர்புடைய எந்தவொரு தகவல்களையும் வெளிப்படுத்த, பரிமாறிக்கொள்ள, பகிர்ந்துகொள்ள அல்லது வழங்க டேகு உறுப்பினர்கள் இதன்மூலம் மாற்றத்திற்கு இடமின்றி அனுமதிக்கின்றனர் என்பதுடன்

எச்.டி.எஃப்.சி வங்கியோ அல்லது மேலே குறிப்பிட்டுள்ள நிறுவனங்களோ அந்தத் தகவல்களைப் பயன்படுத்துவதற்குப் பொறுப்பல்ல.

15. நிர்வகிக்கும் சட்டமும் நீதித்துறை வரம்பும்

15.1 இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கட்டமைப்பு மற்றும் செல்லுபடியாகும் தன்மை எல்லா வகையிலும் இந்தியச் சட்டங்களால் நிர்வகிக்கப்படும். இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் காரணமாக ஏற்படும் சட்ட நடவடிக்கை அல்லது வழக்காடல் எதுவும் மும்பையில் உள்ள நீதிமன்றங்கள் அல்லது தீர்ப்பாயங்களிடம் கொண்டுசெல்லப்படும் என்பதுடன் அந்த நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயத்திடம் மாற்றமின்றி சமர்ப்பிக்கப்படும் என்பதை எச்.டி.எஃப்.சி வங்கி மற்றும் டேகு உறுப்பினர் ஏற்றுக்கொள்கின்றனர். இருப்பினும், எச்.டி.எஃப்.சி வங்கியானது தன்னுடைய முழு தனியுரிமையின்படி எந்தவொரு நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது பிற பொருத்தமான மன்றத்தில் இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் காரணமாக ஏற்பட்டுள்ள சட்ட நடவடிக்கை அல்லது வழக்காடல் எதையும் தொடங்குவதை தேர்வுசெய்யலாம் என்பதுடன் இந்த சட்டப்பூர்வ நடவடிக்கை அல்லது வழக்காடல்களின் வளாகத்தை திட்டமிடுவதற்கு இப்போதோ எதிர்காலத்திலோ இந்த நீதிமன்ற வரம்பு மற்றும் தனக்குள்ள எந்த ஆட்சேனையையும் கைவிடுவதற்கும், அத்தகைய சட்டப்பூர்வ நடவடிக்கை அல்லது வழக்காடல் ஏற்பில்லாத மன்றத்தில் நடத்தப்பட்டுள்ளதாக கோருவதை கைவிடுவதற்கும் டேகு உறுப்பினர் இதன்மூலம் ஒப்புதல் அளிக்கிறார்.

16. மாற்றங்கள் குறித்த அறிவிப்புகள்

16.1 எந்த நேரத்தில் வேண்டுமானாலும், (a) இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் எதையும் திருத்த அல்லது கூடுதலாகச் சேர்ப்பதற்கு; மற்றும்/அல்லது (b) வரம்பிற்கு உட்படாமல், டேகு வகையில் கட்டணங்கள் அல்லது விகிதங்கள் மற்றும்/அல்லது கட்டணங்களைக் கணக்கிடும் முறை ஆகியவற்றை பாதிக்கின்ற மாற்றங்கள் உட்பட டேகில் வழங்கப்படுகின்ற எந்தவொரு அம்சம் மற்றும்/அல்லது பலனை மாற்றுவதற்கு எச்.டி.எஃப்.சி வங்கிக்கு முழு தனியுரிமை உள்ளது. எச்.டி.எஃப்.சி வங்கியானது திருத்தப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், டேகு குறித்து எதிர்காலத்தில் செய்யப்படும் மாற்றங்கள் மற்றும் டேகு வகையில் திருத்தப்பட்ட வட்டி, கட்டணங்கள் மற்றும் விகிதங்களை எச்.டி.எஃப்.சி வங்கியின் இணையதளத்தில் பதிவேற்றுவது அல்லது எச்.டி.எஃப்.சி வங்கியால் தீர்மானிக்கப்படும் எந்த முறையிலும், அவ்வப்போது தகவல் தெரிவித்தபடி இருக்கும். விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில், அதாவது அதில் செய்யப்பட்ட எந்த மாற்றங்களும் உட்பட எச்.டி.எஃப்.சி வங்கியின் இணையதளத்தில் பதிவிடப்படலாம் என்பதுடன் டேகை தொடர்ந்து பயன்படுத்துவதன் மூலம் திருத்தப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதாகக் கருதப்படும்.

17. தள்ளுபடி மற்றும் பற்றுறுதி

17.1 இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது வேறு எந்த ஆவணம்/ ஏற்பாட்டிலும் அடங்கியுள்ளதற்கு மாறானது என எதுவாக இருந்தாலும்: (a) எச்.டி.எஃப்.சி வங்கியுடன் அனைத்து அல்லது எந்தவொரு டேகு உறுப்பினரின் நிகழ்கால மற்றும் எதிர்கால பொறுப்புகள் வகையில், இந்த ஆவணத்தில் கீழ் அல்லது வேறு எந்த கடமை/ கடன்/ வசதிகள்/ வாங்கியவை/ ஆவணம்/ என்றாலும், இத்தகைய பொறுப்புகள் உறுதிப்பட்டிருப்பது, உண்மையானது

அல்லது எதிர்பாராதது, முதன்மையானது அல்லது ஈடுசெய்துள்ளது அல்லது பல அல்லது மற்றவர்களுடன் கூட்டானதாக இருந்தாலும், முதன்மை கடனாளி மற்றும்/அல்லது உத்தரவாதமளிப்பவர் மற்றும்/அல்லது மற்றவகையில் (ஒட்டுமொத்தமாக "பொறுப்புகள்") எதுவாக இருந்தாலும், டேகு உறுப்பினரின் அதே அல்லது வேறுபட்ட தகுதியுடன் மற்றும் மற்றவர்களுடன் பலராக அல்லது கூட்டாக, எந்தவொரு வங்கி, பாதுகாப்பு அடைக்கலம், வசூல் மற்றும் பிற வகையில் எதுவாக இருந்தாலும், பொருந்தக்கூடிய சட்டம், நடைமுறை, வழக்கம் அல்லது மற்றபடி எந்தவொரு பொதுவான பற்றுறுதிக்கும் கூடுதலாக அல்லது ஒரு வங்கியாளராக இதேபோன்ற அளவுக்கு உள்ள உரிமையுடன் இப்போதோ எதிர்காலத்திலோ எச்.டி.எ.்.ப்.சி வங்கியிடம் நடப்பு, சேமிப்பு, மிகைப்பற்று, நிரந்தர அல்லது பிற வைப்புகள், அடமானம் அல்லது எங்கள் பாதுகாப்பில் இருப்பது, சட்டப்பூர்வமானது அல்லது ஆக்கத்திறனுள்ளது என எந்தக் கணக்காக இருந்தாலும் அனைத்து கணக்குகளிலும் உள்ள டேகு உறுப்பினரின் அனைத்து மற்றும் எதிர்கால பங்குகள், பங்குப்பத்திரங்கள், அடமானப் பத்திரங்கள், சொத்து, பதிவேட்டில் உள்ள கடன்கள் மற்றும் பணம் அனைத்தும் என எல்லாவற்றின் மீது திட்டவட்டமான மற்றும் பிரத்யேக பற்றுறுதி இருக்கும், என்பதுடன் (b) இந்த ஆவணங்களின் வகையில் நிறுவையில் இருக்கும்போது எந்தவொரு பொறுப்புகளின் எந்தவொரு பகுதியின் பேமெண்ட்டையும் செலுத்தாமல் இருப்பதை அடுத்து உட்பட அதே திறனுடம் வைத்திருந்தாலும் இல்லாவிட்டாலும், அதே வகைப்பட்ட கணக்காக இருந்தாலும் இல்லாவிட்டாலும் எந்தவொரு பொறுப்புகளின் வகையிலும் நிலுவையில் உள்ள எதையும் தீர்க்க அல்லது அதற்கு எதிரான நோக்கங்களுக்காக மற்றும் டேகு உறுப்பினரின் அனைத்து அல்லது எந்தவொரு கணக்குகளையும் ஒருங்கிணைக்க அல்லது ஒன்றுசேர்க்க மற்றும் எந்தவொரு பணத்தையும் தள்ளுபடி செய்ய அனைத்து கணக்குகள், பத்திரங்கள், மேற்படி தொகைகள் மற்றும் சொத்தில் இந்தத் தொகைகளை தள்ளுபடி செய்தல், மாற்றுதல், விற்பனை செய்தல், பணமாக்குதல், சரிக்கட்டுதல், ஈடுசெய்தலுக்கு எச்.டி.எ.்.ப்.சி வங்கிக்கு வெளிப்படையான தனிப்பட்ட உரிமை உள்ளது. பொருத்தமானது என்று கருதினால், இ.டி.சி வசதி வழங்குவதற்காக இந்த மூன்றாம் தரப்பு துணைநிலை ஒப்பந்ததாரர்(கள்)/சேவை வழங்குநர்களை எச்.டி.எ.்.ப்.சி வங்கி பயன்படுத்திக்கொள்ளலாம் என டேகு உறுப்பினர் ஏற்றுக்கொண்டு உறுதிப்படுத்துகிறார்.

17.2 பொருத்தமானது என்று கருதினால், இ.டி.சி வசதி வழங்குவதற்காக இந்த மூன்றாம் தரப்பு துணைநிலை ஒப்பந்ததாரர்(கள்)/சேவை வழங்குநர்களை எச்.டி.எ.்.ப்.சி வங்கி பயன்படுத்திக்கொள்ளலாம் என டேகு உறுப்பினர் ஏற்றுக்கொண்டு உறுதிப்படுத்துகிறார்.

உறுதிமொழி

நான்/நாங்கள் மாற்றமின்றியும் நிபந்தனையின்றியும் பின்வருவனவற்றை உறுதிப்படுத்தி ஏற்றுக்கொள்கிறோம்:

1. இந்தத் தயாரிப்பின் சிற்றேட்டில் (நான்/நாங்கள் முழுமையாகப் புரிந்துகொண்டது) முன்னதாக அமைக்கப்பட்டுள்ளபடி இ.டி.சி வசதிக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளையும் கட்டணங்களின் அட்டவணையையும் நான்/நாங்கள் கவனமாகப் படித்துப்பார்த்து இதன் மூலம் அவற்றை ஏற்றுக்கொள்கிறோம், உறுதிப்படுத்துகிறோம் மற்றும் ஒப்புக்கொள்கிறோம். டேகு விண்ணப்பம் என்னால்/எங்களால்

நிரப்பப்பட்டுள்ளது என உறுதியளிக்கிறோம். எச்.டி.எஃப்.சி வங்கிக்குப் பொருந்துகின்ற விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் எந்தவொரு மாற்றங்கள்/ புதுப்பிப்புகளும் www.HDFCbank.com இல் புதுப்பிக்கப்பட்டிருக்கும் என்பதை நான்/நாங்கள் புரிந்துகொண்டோம் என்பதுடன் நான்/நாங்கள் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளையும் கட்டணங்களின் அட்டவணையும் குறித்த எந்தவொரு மாற்றங்கள்/புதுப்பிப்புகளையும் எனக்குள்/எங்களுக்குள் வைத்துக்கொள்வோம் என உறுதியளிக்கிறோம்.

2. இந்த டேகு விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள அனைத்து விவரங்கள் மற்றும் தகவல்கள் உண்மையானவை, சரியானவை, முழுமையானவை மற்றும் எல்லா வகையிலும் இன்றைய தேதி வரை உள்ளவை என்பதுடன் நான்/நாங்கள் எந்தத் தகவல்களையும் தருவதற்கு மறுக்க மாட்டோம். டேகு விண்ணப்பத்தில் என்னால்/எங்களால் வழங்கப்பட்டுள்ள எந்தவொரு தகவல்களிலும் ஏதேனும் மாற்றம் குறித்து நான்/நாங்கள் உடனடியாக எச்.டி.எஃப்.சி வங்கியிடம் தெரிவிப்போம். எச்.டி.எஃப்.சி வங்கி அவ்வப்போது கேட்கின்ற மேற்கொண்டு தகவல்கள் அனைத்தையும் வழங்க நான்/நாங்கள் ஏற்றுக்கொண்டு உறுதியளிக்கிறோம்.

3. எந்தக் காரணமும் சொல்லாமலேயே எனது/எங்களது டேகு விண்ணப்பத்தை நிராகரிப்பதற்கான வரம்பற்ற உரிமையை வைத்துள்ளது என்பதை நான்/நாங்கள் புரிந்துகொண்டோம். எனது டேகு விண்ணப்பத்தையும், அதனுடன் சேர்த்து வழங்கப்பட்ட ஆவணங்களையும் தக்கவைத்துக்கொள்வதற்கான உரிமை எச்.டி.எஃப்.சி வங்கிக்கு உள்ளது என்பதை நான்/நாங்கள் புரிந்துகொண்டோம். நிறைவுசெய்யப்பட்ட டேகு விண்ணப்பம், இந்த உறுதிமொழி மற்றும் எச்.டி.எஃப்.சி வங்கி கேட்கக்கூடிய பிற அனைத்து ஆவணங்கள்/தகவல்கள் ஆகியவை இ.டி.சி வசதி வழங்குவதற்கு தானியக்கமாக அல்லது எச்.டி.எஃப்.சி வங்கியால் அனுமதிக்கப்பட்டதாக கருதப்படுவதன் விளைவாக ஏற்பட்டதில்லை, அந்த வழங்கலானது முற்றிலும் எச்.டி.எஃப்.சி வங்கியின் தனியுரிமை என்பதை நான்/நாங்கள் அறிந்துகொண்டுள்ளோம். எச்.டி.எஃப்.சி வங்கி எனது/எங்களது டேகு விண்ணப்பத்தை நிராகரிப்பதன் காரணமாக எனக்கு/எங்களுக்கு ஏற்பட்டிருக்கும் எந்தவொரு இழப்பு, சேதம் அல்லது தாமதத்திற்கு நான்/நாங்கள் எச்.டி.எஃப்.சி வங்கியை பொறுப்புக்கூற மாட்டோம். இந்த விஷயத்தில் எச்.டி.எஃப்.சி வங்கியின் முடிவே இறுதியானதாகும்.

4. எனது/எங்களது டேகு விண்ணப்பத்தில் வழங்கியுள்ள எந்தவொரு தகவல்கள் வகையிலும் சம்பந்தமாகவும் எச்.டி.எஃப்.சி வங்கி அவசியம் என்று கருதினால் அனைத்து பார்வையிடல்கள் மற்றும் விசாரணைகளுக்கும் எச்.டி.எஃப்.சி வங்கி அல்லது அதனுடைய முகவர்களுக்கு நான்/நாங்கள் அனுமதியளிக்கிறோம் என்பதுடன் இந்த விஷயத்தில் முழு ஒத்துழைப்பு அளிப்போம் என நான்/நாங்கள் ஏற்றுக்கொண்டு உறுதியளிக்கிறோம்.

5. எச்.டி.எஃப்.சி வங்கி தன்னுடைய குழு நிறுவனங்கள், மற்ற வங்கிகள், நிதி நிறுவனங்கள், கடன் மையங்கள், முகமைகள், அரசாங்க அதிகாரிகள் எச்.டி.எஃப்.சி வங்கி அவசியம் அல்லது சரியானது என்று கருதும் அத்தகைய நபர்களுடன் மேற்கூறிய தகவல்கள்/தரவு செயலாக்க அல்லது வேறு எந்த பயன்பாடு/நோக்கத்திற்காக எனது/எங்களது டேகு விண்ணப்பத்துடன் தொடர்புடைய அனைத்து தகவல்கள், தரவு அல்லது ஆவணங்களைப்

பகிர்ந்துகொள்ள அல்லது கொடுப்பதற்கு நான்/நாங்கள் அனுமதிக்கிறோம் என்பதுடன் எச்.டி.எ.ஃப்.சி வங்கி அல்லது அத்தகைய மூன்றாம் தரப்பினரால் இந்தத் தகவல்கள் பயன்படுத்தப்படுவது/பகிரப்படுவதற்கு நான்/நாங்கள் எச்.டி.எ.ஃப்.சி வங்கியை பொறுப்புக்கூற மாட்டோம்.

6. விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் டேகு இருப்பில் உள்ள கட்டணங்களின் பட்டியல் வகையில் எங்களால் செலுத்தப்பட வேண்டியிருக்கும் எந்தவொரு மற்றும் அனைத்து தொகைகளையும் எச்.டி.எ.ஃப்.சி வங்கி நிபந்தனையின்றியும் மாற்றமின்றியும் டெபிட் செய்துகொள்ள நான்/நாங்கள் அனுமதிக்கிறோம்.

7. இதன் மூலம் கணக்கு தொடங்கும் நோக்கத்திற்காக இந்தியா அரசாங்கம் வழங்கியுள்ள ஆதார் எண்ணுடன் என்னுடைய மறற கே.ஒய்.சி ஆவணங்களையும் என்னுடைய தனியுரிமையின் பேரில் நானாக முன்வந்து அளிக்கிறேன் என்பதுடன் யு.ஐ.டி.ஏ.ஐ மூலம் அனுமதி வழங்கும் நோக்கத்திற்காக என்னுடைய ஆதார் விவரங்களைப் பயன்படுத்துவதற்கும் எனது ஒப்புதலை அளிக்கிறேன். உங்களுடைய பதிவுக்காக முறையாக சுய-சான்றளிப்பு செய்யப்பட்ட ஆதார் அட்டை / மின்-ஆதாரின் நகலை இணைத்துள்ளேன். நானாக முன்வந்து நிறைவுசெய்து அளித்துள்ள இந்த ஆதார் அட்டை விவரங்கள் உண்மையானவை, சரியானவை மற்றும் முழுமையானவை.

8. எனக்கு/எங்களுக்கு ஃபாஸ்டேக் வழங்குவது தொடர்பில் கே.ஒய்.சி செயலாக்கத்தை நிறைவுசெய்வதற்காக அவ்வப்போது எச்.டி.எ.ஃப்.சி வங்கியால் வெளியிடப்படும் அனைத்து விதிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களையும் பின்பற்ற நான்/நாங்கள் இதன்மூலம் ஏற்றுக்கொண்டு உறுதியளிக்கிறோம்.

9. சாலைப் போக்குவரத்து அமைச்சகத்தின் (எம்ஓஆர்டி) வாஹான் போர்டலுடன் வாகன எண்ணை பகிர்ந்துகொள்ளவும், வாஹான் போர்டலில், விண்ணப்பத்தை செயலாக்குதலுக்காக வாகன எண்ணுடன் சம்பந்தப்பட்டுள்ள தகவல்களைச் சேகரித்துப் பயன்படுத்திக்கொள்ளவும் நான்/நாங்கள் எச்.டி.எ.ஃப்.சி வங்கிக்கு இதன்மூலம் அனுமதியளிக்கிறோம்.

10. என்னால்/எங்களால் விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள விவரங்களின்படி ஃபாஸ்டேக் வாலெட்டை உருவாக்குவதற்கும், பின்னிணைப்பு I இல் என்.பி.சி.ஐ வாகன வகையால் வகைப்படுத்தப்பட்டுள்ள வாகன வகையின்படி வாகனத்திற்கான ஃபாஸ்டேகை வழங்கவும் நான்/நாங்கள் எச்.டி.எ.ஃப்.சி வங்கிக்கு அனுமதி அளிக்கிறேன்.

11. தனிநபர் மற்றும்/அல்லது வர்த்தகப் பயன்பாட்டிற்காக என்னால்/எங்களால் வழங்கப்பட்ட விண்ணப்பத்தில் உள்ள விவரங்களின்படி வாலெட்டை உருவாக்குவதற்கு எச்.டி.எ.ஃப்.சி வங்கிக்கு நான்/நாங்கள் அனுமதி அளிக்கிறோம்.

12. என்னுடைய கிரெடிட் கார்டு அல்லது டெபிட் கார்டு அல்லது கணக்கில் (பொருந்தக்கூடிய வகையில்) பொருந்தக்கூடிய கட்டணங்களை டெபிட் செய்துகொள்ள நான்/நாங்கள் இதன்மூலம் எச்.டி.எ.ஃப்.சி வங்கிக்கு அனுமதி அளிக்கிறோம்.

13. டேகு பதிவுசெய்தல் மற்றும் இருந்துவரும் டேகை சரிபார்த்தல் எதற்கும் நேஷனல் பேமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியாவுடன் (என்.பி.சி.ஐ) வாகன எண், வழங்கப்பட்ட டேகின் டேகு எண் மற்றும் இருந்துவரும் டேகு (எதுவாகினும்) போன்ற விவரங்களைப் பகிர்ந்துகொள்ள நான்/நாங்கள்

எச்.டி.எஃப்.சி வங்கிக்கு அனுமதி அளிக்கிறோம்.

இணைப்பு I

எச்.டி.எஃப்.சி வங்கி டேகுகளுக்கான பொருந்தக்கூடிய கட்டணங்கள் பின்வருமாறு:

ஃபீஸ் மற்றும் கட்டணங்கள்**

விவரங்கள்	தொகை (இந்திய ரூபாய்)
டேகு இணைதல் ஃபீஸ் (ஒருமுறை-பீஸ்)	₹100

ஒருமுறை-மட்டும் பாதுகாப்பு வைப்புத் தொகை**

என்.பி.சி.ஐ வாகன வகை	விளக்கம்	பாதுகாப்பு வைப்பு (ரூபாயில்)	ஆரம்பத் தொகை (ரூபாயில்)
4	கார் / ஜீப் / வேன் / டாடா ஏஸ் மற்றும் அதேபோன்ற சிறு இலகுரக வணிக வாகனம்	100	1
5	இலகுரக வணிக வாகனம் 2-ஆக்ஸில்	300	200
7	பேருந்து 2 ஆக்ஸில் / சிற்றுந்து, டிரக் 2 ஆக்ஸில்	400	500
6	பேருந்து– 3 ஆக்ஸில்	400	500

6	டிரக் - 3 ஆக்ஸில்	500	500
12	டிராக்டர் / டிரெய்லருடன் டிராக்டர், டிரக் 4, 5 & 6 – ஆக்ஸில்	500	500
15	டிரக் 7-ஆக்ஸில் மற்றும் மேலே	500	500
16	எர்த் மூவிங் / ஹெவி கன்ஸ்ரக்சன் மெஷினரி	500	500

**கருத்தில்கொள்ளவும்:

1. சரக்கு மற்றும் சேவைகள் வரிகள் அவ்வப்போது பொருந்தக்கூடியவை என்பதுடன் கட்டணங்களில் விதிக்கப்படும்
2. சௌகரிய ஃபீஸ் ஆன்லைன் ரீசார்ஜிற்குப் பொருந்தலாம்.
3. மேலே குறிப்பிட்டுள்ள கட்டணங்கள் மாற்றத்திற்கு உட்பட்டவை. சமீபத்திய ஃபீஸ் மற்றும் கட்டணங்களுக்கு பார்க்கவும், https://v.hdfcbank.com/htdocs/common/fastag/feescharges.html

குறிப்பு:

1. மேலே குறிப்பிட்டுள்ள டேகு வைப்பு விகிதங்கள் உங்களுடைய வாகன வகையைப் பொறுத்து அமையும் என்பதுடன் மேலே பத்தி 8.5 இல் உள்ளதன்படி, கீழே அமைக்கப்பட்டுள்ள விதிவிலக்கிற்கு உட்பட்டு, டேகை முடக்கும் நேரத்தில் உங்களுக்கு திரும்ப வழங்கப்படும்
2. மேலே குறிப்பிட்டுள்ள டேகு வைப்பானது (i) தொடர்புடைய டேகு உறுப்பினரானவர் எச்.டி.எஃப்.சி வங்கியால் முழுமையான உங்களுடைய-வாடிக்கையாளரை அறிக சரிபார்ப்பு செய்யப்படாதவர் அல்லது (ii) எதிர்மறை டேகு இருப்பு இருந்துகொண்டிருப்பது என்றால் ரீஃபண்டு செய்யப்பட முடியாததாகும்.

<u>மற்ற தயாரிப்புகளின் கலப்பு-விற்பனைக்கான ஒப்புதல்</u>

1. இந்த ஒப்புதலில் பின்வரும் தடிமனாக்கப்பட்ட சொற்பதங்கள் இதன்கீழ் நிர்ணயிக்கப்பட்ட அர்த்தங்களைக் கொண்டிருக்கும்:

   "**தரவு**" என்பது கடந்தகால தயாரிப்புகள் தொடர்புடைய உட்பட பின்வருபவை உள்ளிட்ட, என்னுடன்/எங்களுடைய தொடர்புடைய வகையிலான அனைத்து தனிப்பட்ட தரவு, அதிமுக்கியமான தனிப்பட்ட தரவு அல்லது தகவல்கள், பரிவர்த்தனை தரவு, தருவிப்புத் தரவு, வேறு எந்தத் தகவல்கள் போன்றவையும் ஆகும்:

   (a) உங்கள்-வாடிக்கையாளரை அறிக(கே.ஒய்.சி)/பணம் வெள்ளையாக்கல் எதிர்ப்பு (ஏ.எம்.எல்) தரவு;
   (b) எந்தவொரு தயாரிப்பிற்காகவும் வங்கியிடம் சமர்ப்பிக்க எந்தவொரு விண்ணப்பம் அல்லது கோரிக்கையை உருவாக்கும்போது சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள்;
   (c) இந்த உறவுநிலையின்போது அல்லது எந்தவொரு பரிவர்த்தனை, அறிக்கைகள், பதிவுகள், உள்நுழைவுகள், அது சம்பந்தமாக உருவாக்கப்பட்ட எந்தவொரு பரிவர்த்தனை தரவு;
   (d) வேறு எந்த மூலத்திலிருந்து வங்கியால் வாங்கப்பட்ட/பெறப்பட்ட தகவல்கள்;
   (e) எந்தவொரு தருவிக்கப்பட்ட தரவு.

"**தருவிக்கப்பட்ட தரவு**" என்பது எந்தவொரு அல்காரிதம்கள், பகுப்பாய்வுகள், மென்பொருள், தானியக்கங்கள், சுயவிவரமாக்கல் வழியாகவும் உட்பட எந்தவொரு கிரெடிட் மதிப்பெண்கள், கிரெடிட் தகவல்கள், நடத்தைரீதியான விளக்கங்கள், சுயவிவரமாக்கல், பகுப்பாய்வு முடிவுகள், அறிக்கைகள் (வங்கியால் உள்ளகமாக அல்லது மற்ற நபர்களால் தயார்செய்யப்பட்டது) ஆகியவற்றைக் குறிக்கலாம் என்பதுடன் இத்தகைய தருவிப்புகள் என்னிடம்/எங்களிடம் சேகரிக்கப்பட்ட தகவல்களைச் சேர்ந்ததாக இருக்கலாம் அல்லது வேறு எந்த நபர், தரவுத்தளம் அல்லது வங்கி அல்லது மற்ற நபர்களால் மூலத்திலிருந்தும் பெற்றுக்கொண்ட வேறு எந்தத் தகவல்களின் கலப்பாகவும் இருக்கலாம். மேலேயுள்ள துணை-செயலாக்கங்கள்/முறைகளை சம்பந்தப்படுத்தி அல்லது அவற்றின் வழியாகப் பெறப்பட்ட இத்தகைய தருவிப்பின் உருவாக்கம் "**தருவிப்பு**" என குறிப்பிடப்படலாம்.

"**குறிப்பிட்ட நோக்கங்கள்**" என்பவை கிரெடிட் மதிப்பீடு, இடர் மதிப்பீடு, இடர் பகுப்பாய்வு, கிரெடிட் தகவல்கள் அறிக்கைகளைப் பெறுதல், மதிப்பெண்கள், சரிபார்த்தல்கள், மோசடி சரிபார்ப்பு, மோசடி கண்டறிதல்கள், மோசடி தடுப்பு, குற்றம்/தீவிரவாத நிதியுதவி உட்பட குற்றம் கண்டறிதல் மற்றும் தடுத்தல், முறைகேடுகள் அல்லது முரண்பாடான ஆவணங்கள் அல்லது தகவல்களைக் கண்டறிதல், தவறாகப் பயன்படுத்துவதைத் தடுத்தல், கிரெடிட் நன்மதிப்பு மதிப்பீடு, நிதிநிலை, உரிய விழிப்புநிலை, பின்னணி சரிபார்ப்பு, உடல் மற்றும் பிற ஆய்வுகள், சரிபார்த்தல்கள், மேலே உள்ள எதற்கும் அறிக்கைகளைப் பெறுதல், கே.ஒய்.சி/ஏ.எம்.எல் சரிபார்ப்புகள், வாடிக்கையாளர் சேவை, கண்காணித்தல், வசூலிப்புகள், இயல்புநிலை கண்டறிதல், இயல்புநிலை தடுப்பு, இயல்புநிலை விசாரணை, மீட்பு, எந்தவொரு வழக்கு விசாரணைகள், செயல்பாடுகள், விசாரணைகள், விசாரிப்புகள், தீர்வுகளை நாடுதல், உரிமைகளை நிலைநாட்டுதல், கிரெடிட் அறிக்கை உள்ளிட்ட அறிக்கையிடல், கே.ஒய்.சி அறிக்கையிடல், இயல்புநிலை அறிக்கையிடல், ஆவணமாக்கல், முழுமையாக்கல் உள்ளிட்டவற்றை ஒட்டுமொத்தமாகக் குறிப்பிடலாம், இவற்றில் எதுவும் உள்ளகமாக உறுதியேற்கப்பட்டிருப்பது அல்லது ஏதேனும் கிரெடிட் தகவல்கள் நிறுவனம், மையம், சேவை வழங்குநர், ஆலோசகர், விற்பனையாளர், முகவர், நிதிநிறுவனம், துணை-பிராண்ட் நிறுவனம்/கூட்டாளர், விநியோகிப்பாளர், விற்பனை/சந்தை முகவர், ஏதேனும் கூட்டாளர், நாம் ஒரு பாகமாக உள்ள சூழியலமைப்பில் மற்ற பிளேயர்/இடைநிலையாளர், டி.பி.ஏ.பி (நாம் பி.எஸ்.பி வங்கியாக செயல்படும் நபர்), கூட்டு முயற்சியாளர், துணை-கடன் வழங்குநர், துணை-துவக்குநர், வியாபாரி, சேகரிப்பாளர், வாய்ப்பு உருவாக்குநர், மூலம் வழங்கும் நிறுவனம், கிளைண்ட், வாடிக்கையாளர் அல்லது எந்தவொரு தயாரிப்புகள் அல்லது சேவைகளுக்கும் கூட்டு சேர்ந்துள்ள அல்லது ஒப்பந்தம் செய்துள்ள பிற நபர் அல்லது பலதரப்பட்ட விருப்பத்தேர்வுகளின் கலவையின் வழியாக மேற்கொள்ளப்பட்டவை. இந்த கிரெடிட் தகவல்கள் நிறுவனம், மையம், சேவை வழங்குநர், ஆலோசகர், விற்பனையாளர், முகவர், நிதிநிறுவனம், துணை-பிராண்ட் நிறுவனம்/கூட்டாளர், நபர் மற்றும் அவர்களுடைய சேவை வழங்குநர்கள், ஆலோசகர்கள், விற்பனையாளர்கள் ஆகியவை "**செயலாக்க நிறுவனம்**" எனக் குறிப்பிடப்படுகிறது.

"தயாரிப்பு(கள்)" என்பவை தயாரிப்புகள், வங்கி/அதன் துணை நிறுவனங்கள்/ கூட்டு நிறுவனங்களின் சேவைகள் மற்றும்/அல்லது வணிகங்கள் அல்லது வங்கி/அதன் துணை நிறுவனங்கள்/ கூட்டு நிறுவனங்கள் விநியோகிப்பவை, எந்தவொரு

தயாரிப்புகள் அல்லது சேவைகள் (கணக்கானது வங்கியுடன் அல்லாமல் பி.எஸ்.பி வங்கியுடன் இருக்கும்போது டி.பி.ஏ.பி வழியாக செய்யப்படும் யு.பி.ஐ பரிமாற்றல் என்றால் போன்ற வகையில் எந்தவொரு பரிவர்த்தனையின் தொடக்கமும் நேரடியாக வங்கியுடன் அல்லாமல் தொடர்புடைய செயலாக்க நிறுவனத்துடன் இருப்பது உட்பட) வகையில் ஸ்பான்சர் வங்கி அல்லது பி.எஸ்.பி வங்கியாகச் செயல்படும் முகவரை குறிப்பதாகும், இவ்விடத்தில், வங்கியானது வேறு எந்த இடைநிலையாளர்/ நிறுவனத்தின் வழியாக, நேர்மாறாக என்னிடம்/எங்களுடன் நேரடி உறவில் இருந்தாலும் மறைமுக உறவில் இருந்தாலும் என்பதுடன் நான்/நாங்கள் அனுமதிக்கப்பட்ட கையொப்பமிடுநர் அல்லது அனுமதிக்கப்பட்ட நபர் அல்லது நேரடியாகவோ மறைமுகமாகவோ எந்தவொரு சேவையையும் பயன்படுத்துகின்ற தனிநபர்-அல்லாத/ வாடிக்கையாளர்/ பயனரின் பிரதிநிதி என்றால்.

என்னால்/எங்களால் விண்ணப்பிக்கப்பட்ட/கோரிக்கை விடுக்கப்பட்ட அல்லது கிடைத்துள்ள தயாரிப்புகள் (எனது/எங்களது கணக்கானது வங்கியுடன் அல்லாமல் பி.எஸ்.பி வங்கியுடன் இருக்கும்போது டி.பி.ஏ.பி வழியாக செய்யப்படும் யு.பி.ஐ பரிமாற்றல் என்றால் போன்ற வகையில் எந்தவொரு பரிவர்த்தனையின் தொடக்கமும் நேரடியாக வங்கியுடன் அல்லாமல் தொடர்புடைய செயலாக்க நிறுவனத்துடன் இருப்பது உட்பட) "**கோரப்பட்ட தயாரிப்புகள்**" என குறிப்பிடப்படும் என்பதுடன் கோரப்பட்ட தயாரிப்புகள் தவிர்த்து இந்தத் தயாரிப்புகள் (எதிர்கால தயாரிப்புகள் அல்லது சேவைகள் உட்பட) "**பிற தயாரிப்புகள்**" என குறிப்பிடப்படும்.

2. இதன்மூலம், வங்கியின் (www.hdfcbank.com இல் கிடைக்கிறது) தனியுரிமைக் கொள்கையைப் படித்து, புரிந்துகொண்டு ஏற்றுக்கொள்கிறேன்.
3. நான்/நாங்கள் பின்வருவனவற்றுக்கு இதன்மூலம் எச்.டி.எஃப்.சி வங்கி லிமிடெடை ("**வங்கி**" என்பதில் அதனுடைய அடுத்து வருபவர்கள் மற்றும் நியமிக்கப்பட்டவர்கள் என கருதப்படும்)அனுமதிக்கிறேன்:

a. குறிப்பிட்டுள்ள நோக்கங்கள் எதற்காகவும் செயலாக்கும் நிறுவனங்களுடன் மூலம் செயலாக்குதல், பயன்படுத்துதல், சேமித்தல், தக்கவைத்தல், பகிர்தல் அல்லது எந்தவொரு செயலாக்கல் நிறுவனங்கள் அல்லது தரவுத்தளங்கள், மூலங்கள், நபர்கள்/நிறுவனங்கள், தரவு அல்லது வேறு பகுதியில் இருந்து சேகரித்தல்:

i. வேறு எந்த பிற தயாரிப்புகளுக்காகவும் அவ்வப்போது எனது/எங்களது தகுதி (முன்-தகுதி உட்பட), பொருத்தம் அல்லது மதிப்பபு மற்றும்/அல்லது சுயவிவரமிடுதலை மதிப்பிடுதல், ஆராய்தல் மற்றும்/அல்லது தீர்மானித்தலுக்காக;
ii. மேற்படி நோக்கங்களுன் தொடர்புடைய வகையில் எந்தவொரு தருவிப்புத் தரவையும் (வங்கி மற்றும் எந்தவொரு செயலாக்க நிறுவனத்திற்கும் இடையில்) தருவித்தல் மற்றும் பகிர்தலுக்காக;
iii. மின்னஞ்சல், அஞ்சல் முகவரி, தொலைபேசி, சமூக ஊடகம், பயன்பாடுகளில் உள்ள பேனர்கள்/மின்னணு தளங்கள், அறிவிப்புகள், இணையதளம், மூன்றாம் தரப்பினர்/பிற நபர்களின் வளாகங்கள் வழியாக உட்பட தொடர்புகொள்ளுதல், தொடர்பை நிறுவுதல், இருக்குமிடங்கள்;
iv. மேலே குறிப்பிட்டுள்ள எதற்காகவும் பகுப்பாய்தல்கள், தானியக்க செயலாக்குதல்கள், அல்காரிதம்கள், ரோபாட்டிக்ஸ், சுயவிவரமாக்கல், மறைகுறியாக்கங்கள், குறியாக்கங்கள், அநாமதேயமாக்கல்களை அமைத்தல்.

b. வங்கியால் வெளியிலோ உள்ளகத்திலோ எனக்கு/எங்களிடம் தெரியப்படுத்தல், காட்சிப்படுத்தல் அல்லது தகவல்தொடர்பு மூலம், சந்தைப்படுத்தல், விற்பனை செய்தல், கலப்பு-விற்பனை, வங்கி வழியாக அல்லது வங்கியின் பயன்பாடுகள்/பிளாட்பார்ம்கள் வழியாக, வங்கியின் வேறு எந்த சேனல்கள், டி.பி.ஏ.பி, சேவை வழங்குநர்கள், முகவர்கள் அல்லது மற்றவகையில் அறிவிப்புகள், மின்னஞ்சல்கள் அல்லது பிற வகைப்பட்ட தகவல்தொடர்புகள், அவை ஆன்லைன் அல்லது ஆஃப்லைன் அல்லது தொலைத்தொடர்புகள் என எதுவாக இருந்தாலும், கிடைப்பது அல்லது தகுதிநிலை அல்லது ஆஃபர், பிரின்சிபில் வகையில் அல்லது மற்றபடி, எந்தவொரு பிற தயாரிப்புகளையும், இந்த நோக்கத்திற்காக இங்கே இது தொடர்பில் மேலே 3 (a) இன் (ii) முதல் (iv) வரை குறிப்பிட்டு அனைத்து அனுமதியளித்தல்களும்.

4. செயலாக்க நிறுவனங்கள் தரவு அல்லது அதனுடைய எந்த பாகத்தையும், மேற்படி ஒப்புதல் அளிக்கப்பட்ட நோக்கங்களுக்காக செயலாக்க, பயன்படுத்த, சேமிக்க, தக்கவைக்க, வங்கி அல்லது பிற செயலாக்க நிறுவனங்களுடன் பகிர்ந்துகொள்ள அல்லது வங்கி, வேறு எந்த செயலாக்க நிறுவனங்கள் அல்லது பிற தரவுத்தளங்கள், மூலங்கள், நபர்கள்/நிறுவனங்களிடம் சேகரித்தவற்றுக்கு நான்/நாங்கள் அனுமதியளிக்கிறோம்.
5. சாலைப் போக்குவரத்து அமைச்சகத்தின் (எம்ஓஆர்டி) வாஹான் போர்டலுடன் வாகன எண்ணை பகிர்ந்துகொள்ளவும், வாஹான் போர்டலில், காப்பீடு மற்றும் நிதிவசதி போன்ற பிற தயாரிப்புகளுக்கான வாய்ப்புகளை வழங்க வாகன எண்ணுடன் சம்பந்தப்பட்டுள்ள தகவல்களைச் சேகரித்துப் பயன்படுத்திக்கொள்ளவும் நான்/நாங்கள் இதன்மூலம் அனுமதியளிக்கிறோம்.
6. மேற்படி ஒப்புதல்கள் மற்றும் அனுமதிகளின் நோக்கங்களுக்காக, இந்த ஒப்புதலின் கீழ் நான்/நாங்கள் அனைத்து தரவையும் தனித்தனியாக வழங்கியதாகக் கருதப்படும்.
7. மேற்படி நோக்கங்களுக்காக மேற்படி ஒப்புதல்கள்/அனுமதிகள் ஆகியவை தயாரிப்பின் விண்ணப்பம்/தயாரிப்பின் கால அளவு/ எந்தவொரு பரிவர்த்தனையின் நிறைவடைவும் செல்லுபடியாகும் காலத்தையும் தாண்டி நீடிக்கும் என்பதை நான்/நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.
8. இந்த ஆவணத்தின்படி தரப்பட்டுள்ள அல்லது மறுக்கப்பட்டுள்ள ஒப்புதல்களானவை வேறு எந்த பெறப்பட்ட அல்லது தரப்பட்ட ஒப்புதல்களையும் கட்டுப்படுத்தாது.

பொறுப்பு துறப்பு: மேலே உள்ள ஆவணம் அசல் ஆங்கில வடிவின் மொழிபெயர்ப்பாகும். இதில் உள்ள விஷயங்களில் ஏதேனும் முரண்பாடு இருந்தால், ஆங்கில வடிவே கருத்தில் எடுத்துக் கொள்ளப்படும். ஏதேனும் கேள்விகளுக்கு, தயவுசெய்து உங்கள் உள்ளூர் எச்டிஎஃப்சி வங்கிக் கிளையை தொடர்பு கொள்ளுங்கள்.